**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 5/2024**

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 23.02.2026 | | |
| பெயர்: | நல்லரசன்<br>(PW– Cross con ) | தகப்பனார் பெயர்: | கேசவன் |
| கிராமம்: | அளக்குடி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வியாபாரம் | வயது : | 47/2026 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி : 23.02.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 13.45)**

1. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தான் தாவா சொத்தினை நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் 13வது பக்கத்தில் உள்ள புகைப்படம் என்னுடையதுதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் 13வது தாளில் கம்பி வேலிக்கு பின்னால் உள்ள இடம்தான் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததாக கூறப்படும் இடம் என்றால் சரிதான்.

2. நான் கிரயம் வாங்குவதற்கு முன்பு தாவா சொத்தின் மூல ஆவணங்களை சரியாக பார்த்துள்ளேனா என்றால் தாவா சொத்து பிச்சையம்மாள் பெயரில் இருந்தது, அதன்பிறகு வாரிசு அடிப்படையில் செந்தாமரைக்கண்ணனுக்கு சென்றுவிட்டது. செந்தாமரைக்கண்ணனிடமிருந்து நான் கிரயம் வாங்கினேன். செந்தாமரைக்கண்ணனுக்கு தாவா சொத்து உயிலின் அடிப்படையில் கிடைக்கப்பெற்றது.

3. வாரிசு அடிப்படையில் கிடைக்கப்பெற்றது தவறு என்றால் சரிதான். நான் பிச்சையம்மாளை நேரில் பார்த்துள்ளேன். பிச்சையம்மாளின் கணவர் பெயர் அமிர்தலிங்கம் என்றால் சரிதான். பிச்சையம்மாளுக்கும் அமிர்தலிங்கத்திற்கும் வாரிசுகள் கிடையாது என்றால் சரிதான். அமிர்தலிங்கத்திற்கு சுந்தராம்பாள், மருதம்பாள், வடிபம்பாள், தங்கையா என்ற 4 சகோதரிகள் என்றால் சரிதான். அவர்களில் தங்கையாவை பற்றி மட்டும் எனக்கு தெரியும்.

4. மருதம்பாளின் மகன்கள் தமிழரசன், வீரமணி ஆகியோரை பற்றி எனக்கு தெரியும். பிச்சையம்மாள் காது கேளாத, வாய் பேச முடியாத மாற்றுத்திறனாளி என்ற விபரம் எனக்கு தெரியும். பிச்சையம்மாளுக்கு சொத்து எவ்வாறு கிடைத்தது என்ற விபரத்தை நான் சொத்து வாங்குவதற்கு முன்பு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

5. தாவா சொத்தின் முந்தைய ஆவணங்களில் உயில் ஆவணத்தை தவிர வேறு எந்த ஆவணமும் எனக்கு தெரியாது. அதுபற்றி நான் எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை. நான் கடை நடத்தும் ஊர் என்பது மணியிருப்பு என்பதாகும். நான் மணியிருப்பு கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்து உள்ள ஊர் என்பது அய்யம்பேட்டை என்றால் சரிதான்.

6. மணியிருப்பிற்கும் அய்யம்பேட்டை கிராமத்திற்கும் சுமார் 2 கி.மீ தூரம் இருக்கும். புல எண்.142/15, 17, 18, 20 அனைத்து இடங்களும் நந்தகோபாலுக்கு பிறகு பிரதிவாதி அன்பரசுவின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான். புல எண்.142/15ல் தான் பிரதிவாதி அன்பரசுவின் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டின் கீழ்பகுதி தான் 142/16 என்றால் சரியல்ல. புல எண். 142/15ற்கு அடுத்தது 142/16 என்றாலும், நான் அதை மறைத்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

7. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடு பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள கட்டிடம் SBM திட்டத்தின் கீழ் கட்டப்பட்டது என்றால் சரிதான். புல

எண்.142/16ல் கழிவறை உள்ளது என்றால் இல்லை, 142/17ல் தான் உள்ளது. 142/17ல் தான் உள்ளது என்பதற்கான ஆவணங்கள் என்னால் தாக்கல் செய்ய இயலுமா என்றால் அளந்தால் தெரியும்.

8. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடு பிரதிவாதியின் வீடு என்றால் சரிதான். அதில் குறியீடு செய்யப்பட்டுள்ள 1961 என்ற வருடத்தில் தான் அது கட்டப்பட்டது என்றால் சரிதான். புல எண்.142/17ல் உள்ள கழிவறையில் தான் பிரதிவாதியின் தாத்தா காலத்திலிருந்து அவர்களது குடும்பம் பயன்படுத்தி வருகிறது என்றால் சரிதான்.

9. தாவா சொத்து எந்த வருடத்திலிருந்து எந்த வருடம் வரை பிச்சையம்மாளிடம் இருந்து வருகிறது என்பதையும், எந்த வருடத்திலிருந்து செந்தாமரைக்கண்ணனிடம் இருந்து வருகிறது என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிச்சையம்மாள் எனது பாட்டியின் சகோதரி ஆவார். தாவா சொத்து உள்ள இடம் என்பது கொள்ளிடம் சார் பதிவக அலுவலகத்திற்கு உட்பட்டது என்றாலும் தாவா சொத்தின் உயிலானது சிதம்பரம் சார் பதிவக அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரிதான்.

10. எனது தந்தை காலத்திலிருந்து தாவா சொத்தானது எங்களது அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்பதை காட்ட ஏதுவாக ஆவணங்கள் ஏதும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சியாக அளக்குடியை சேர்ந்த ஸ்டாலின் என்பவர் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். அவர் எனது பக்கத்து தெருவை சேர்ந்தவர். தாவா சொத்தில் எங்களது அனுபவம் பற்றி அவர் நீதிமன்றத்தில் சாட்சி அளிப்பார் என்றால் சரிதான். (**நேரம்–14.30**)

(**நேரம்–15.50**)

11. தாவா சொத்தை கிரயம் செய்த பிறகு பிரதிவாதியிடம் உள்ள ஆக்கிரமிப்பு பகுதியை மீட்க நான் AKC காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். காவல் நிலையத்தில் நீதிமன்றத்தில் சென்று

முறையிட வேண்டும் என திருப்பியனுப்பிவிட்டார்கள். எனக்கு பத்திரம் பதிவு செய்து கொடுத்த சார் பதிவாளரிடம் போலிசார் தரப்பில் விசாரணை செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தை நான் முந்தைய ஆவணங்கள் ஏதும் இல்லாமல் போலி உயிலை தயார் செய்து கிரயம் பெற்றதால் சார் பதிவாளர் எனக்கு ஆதரவாக போலிசாரிடம் எதுவும் செய்ய இயலாது என கூறிவிட்டார் என்றால் சரியல்ல.

12. நான் கிரயம் பெற்ற செந்தாமரைக்கண்ணனிடம் முழு பணமும் கொடுக்கப்பட்டுவிட்டது, மீதம் ஏதும் கிடையாது. பணமானது ரொக்கமாக நேரடியாக கொடுக்கப்பட்டது. மேற்படி உயிலில் தாவா சொத்தை தவிர மற்ற சொத்துக்களும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உயிலில் 4வது அயிட்ட சொத்தான RS.No.285/5 என்பது வீரமணிக்கு சொந்தமானது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்கண்ட விபரம் எனக்கு தெரியும் என்றாலும், அதை மறைத்து நான் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

13. வீரமணியும் தமிழரசனும் அனுபவித்து வருகின்ற இடங்களான பிச்சையம்மாளிடமிருந்து கிரயம் பெற்ற சொத்தையே மீண்டும் மேற்படி உயில் ஆவணத்தின் மூலம் சொத்தானது செந்தாமரைக்கண்ணனுக்கு கிடைக்கப்பெற்றது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக மயிலாடுதுறை மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

14. உயில்படி கடந்த 12.04.2023ல் தாவா சொத்திற்கு செந்தாமரைக்கண்ணன் பெயரில் பட்டா மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாவா சொத்தை ஆவணத்தின்படி 23.11.2023ல் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். கிரய ஆவணத்தின் 13வது தாளில் உள்ள நிழற்படமானது 09.11.2023ல் எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி இந்த வழக்கில் ஆக்கிரமித்ததாக கூறப்படும் தேதி என்பது 30.11.2023 என்றால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது, ஆனால் தேதி ஞாபகமில்லை.

15. நான், பிரதிவாதி 30.11.2023ல் ஆக்கிரமித்ததாக கூறிவிட்டு, ஆனால் அதற்கு முன்பே 09.11.2023ல் நிழற்படம் எடுத்து கிரய ஆவணத்தில் இணைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த நிழற்படத்தில் இரும்பு கம்பி உள்ளது என்பதை நான் ஒத்துக்கொண்டு சாட்சியமளித்துள்ளதால் இந்த வழக்கின் வழக்கு மூலம் எழவில்லை என்றால் சரியல்ல.

16. நான் புகைப்படம் எடுத்தது என்பது புல எண்.341/5 என்றால் சரியல்ல. அந்த இடம் அரசின் குளக்கரையை சேர்ந்தது என்றால் சரியல்ல. நானும் செந்தாமரைக்கண்ணனும், மற்றும் ஆவண எழுத்தர் மனோகரனும் கூட்டு சேர்ந்து சதி செய்து போலி ஆவணம் தயார் செய்து புகைப்படம் எடுத்து போலி உயிலின் அடிப்படையில் வா.சா.ஆ.1 ஆவணத்தை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

17. மேற்கண்ட சம்பவத்தை புகாராக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பிரதிவாதி கொடுத்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது. விசாரணைக்கு காவல் நிலையத்தில் அழைத்தார்களா என்றால் இல்லை. தாவா சொத்து பிச்சையம்மாளுக்கே சொந்தம் கிடையாது என்றாலும், தாவா சொத்தானது சிவக்கொழுந்து மனைவி மங்காத்தம்மாளுக்கு சொந்தமானது என்றாலும் சரியல்ல. அதன்பிறகு தில்லை கோவிந்தம், கிருஷ்ணமூர்த்தி, ஆகியோருக்கு 1941ம் ஆண்டு பதிவு ஆவணம் மூலம் உரிமையானது என்றாலும் சரியல்ல.

18. 1961ம் வருடம் பிரதிவாதியின் தாத்தா நந்தகோபாலுக்கு தாவா சொத்து கிடைக்கப்பெற்று, அவருக்கு பிறகு 1961லிருந்து பிரதிவாதியின் வசத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் என்பது என்ன சாகுபடி செய்ததற்காக கட்டப்பட்டது என்றால் உளுந்து சாகுபடி செய்ததற்காக கட்டப்பட்டது. 2023ம் வருடத்திலிருந்து வா.சா.ஆ.2 ஆவணத்தை தவிர வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

19. நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது ஏன் கிஸ்தி

பணம் கட்டி ரசீது வாங்கப்பட்டது என கிராம நிர்வாக அலுவலர் என்னிடம் கேட்டாரா என்றால் கேட்டார். அவர் வா.சா.ஆ.2 ஆவணத்தை திரும்ப கொடுத்துவிடுமாறு கூறினார், ஆனால் நான் கொடுக்கவில்லை. வா.சா.ஆ.2 ஆவணம் எந்த சாகுபடியும் செய்யாமல் தவறான தகவலை கொடுத்து பெறப்பட்டது என்றால் சரியல்ல.

20. தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் இல்லை என்றாலும் பெயரளவில் நான் கிரயம் பெற்று தாவா சொத்தை அனுபவித்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்கான பணத்தை செந்தாமரைக்கண்ணன் கேட்டதற்கு வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால் பிறகு பணம் தருகிறேன் என கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 16.22)**